# ஸ்ரீ ராமர் ஆலயம்

பேராக், தெலுக் இந்தான் நகரத்திலிருந்து சுமார் 21 மைல் தூரத்தில் அமைந்துள்ள பாகன் டத்தோ அருகில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராமர் ஆலயத்தில் ஸ்ரீ ராமர் பிரான் வலப்புறத்தில் அவரது மனைவி ஸ்ரீ சீதா தேவியுடனும், இட புறத்தில் ஸ்ரீ லட்சுமனுடனும் காட்சி அளிக்கிறார். அதோடு இத்திருதலத்தில் ஹனுமான் முழங்காலிட்டு ஸ்ரீ ராமரை வணங்குவது போல அமைக்கப்பட்டுள்ளது. அண்ணன் தம்பியுமாகிய ஸ்ரீ ராமரும், ஸ்ரீ லட்சுமணனும் தங்களது வலது கரங்களில் அம்புகளையும் இடது கரங்களில் வில்லையும் ஏந்தி உள்ளது போல தோற்றம் அளிக்கின்றனர். கம்பரின் கூற்றுபடி, ஸ்ரீ கோதண்ட ராமர், தவறுகள் செய்பவர்களுக்கு தண்டனை அளித்து தர்மத்தை நிலை நாட்டி தர்மத்தின் தலைவர் என கருதப்படுகிறார். அதோடு மட்டுமில்லாமல் அவர் ஒரு தலை சிறந்த போர் வீரர், அதர்மத்தை ஆட்கொள்ளும் தலைமகன் மற்றும் அழகின் கடாட்சம் என திகழ்கிறார். ஸ்ரீ ராமரின் அளவில்லா இரக்க குணமும். தைரியமும், கடமை பக்தியும் என்றென்றும் போற்றுதற்குரியது. கோல பேராக் கோதண்ட ஸ்ரீ ராமர் திருக்கோவில் ஸ்ரீ ராமரின் நேர்மையையும், புகழையும் எடுத்தியம்பும்படி அமைக்கப்பட்டுள்ளது.

# கோல பேராக் தோட்ட ஸ்ரீ ராமர் ஆலய வலராறு

தென்கிழக்கு ஆசியாவில் அனைவராலும் போற்றப்பட்டு வந்த வரும் ஸ்ரீ ராமரின் காவியம், மறைந்த நமது துன் V.T சம்பந்தன் அவர்களால் ஈர்க்கப்பட்டு திருகோவில் அமைக்க ஊன்றுகோலாக இருந்தது. பகான் டத்தோ அருகில் உள்ள தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான கோல பேராக் தோட்டத்தில் கோதண்ட ஸ்ரீ ராமரின் ஆலயம் எழுந்தருள்வதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

தமிழ் நாடு, மாமல்லபுரத்தை சேர்ந்த கட்டிட கலை நிபுணர் திரு. G. தியாகராஜன் அவர்கள் ஆலயத்தின் கட்டிட வரைப்படத்தை வரைந்து கொடுக்க, செப்டம்பர் 1977-ஆம் ஆண்டு அமரர் துன். V.T. சம்பந்தன், டான்ஸ்ரீ டத்தோ K.R சோமசுந்தரம், அமரர் திரு. G.K. சாமி, அமரர் திரு V. மீனாட்சி சுந்தரம் மற்றும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் இயக்குநர் வாரியத்தினால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த அடிக்கல் நாட்டு விழா தமிழகத்தை சார்ந்த சிற்பக் கலை நிபுணர் திரு. G. வன்மிகநாதன் முன்னிலையில் சிறப்பாக நடந்தேறியது.

18.05.1979-ஆம் ஆண்டு நமது துன் V.T. சம்பந்தன் அவர்கள் துரதிருஷ்டவசமாக அமரரானார். அதன்பிறகு இத்திருகோவிலின் கட்டுமானப்பணி நமது டான்ஸ்ரீ K.R. சோமசுந்தரம் அவர்களின் முயற்சியோடு தொடரப்பட்டது.

ஏறக்குறைய 30 சிற்பிகளின் உதவியோடு திரு. G. வன்மிகநாதன் அவர்கள் கோவில் சிற்பக்கலை பணிகளை மிக சிறப்பான முறையில் மேற்கொண்டார். நமது இந்து மத சாஸ்திரபடி, இக்கோவிலின் மூலஸ்தானம், விமானம், கோபுரங்கள், கருடன் தேவஸ்தானம் மற்றும் கொடி மரம் போன்றவற்றை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மகாபலிபுரத்திலிருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட 24 கிரானைட் தூண்கள், நான்கு சைவ மற்றும் வைஷ்ணவ சிற்பங்களை பிரதிப்பளிக்கின்றன. ஸ்ரீ ராமர், ஸ்ரீ சீதா தேவி, ஸ்ரீ லட்சுமணன், ஹனுமான் மற்றும் சிலைகள் கூட மகாபலிபுரத்தில் இருந்தே கொண்டு வரப்பட்டது.

இத்திருகோவிலின் முதல் கும்பாபிஷேகம், 25-5-1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டை சேர்ந்த ஸ்ரீ சாம்பசில சிவாச்சாரியார் தலைமையில் ஏழு குருக்களால் மிக சிறப்பாக நடத்தப்பட்டது.

ஸ்ரீ ராமர் கோவிலின் இரண்டாம் கட்ட கட்டுமானப்பணியின் போது, ஸ்ரீ கணேசன், ஸ்ரீ லட்சுமணன் மற்றும் ஸ்ரீ ஹனுமான் ஆகிய மூன்று சிலைகள் நிறுவப்பட்டு அதற்கான கும்பாபிஷேகமும் மங்களகரமாக நிறைவேறியது. அதனை தொடர்ந்து தற்போது ஸ்ரீ சக்தி மகா மாரியம்மன் திருக்கோவிலும் எழுப்பப்பட்டு, அதன் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய 2015ஆம் ஆண்டிற்குள்அதன் திருப்பணிகள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது

## ஸ்ரீ இராமர் ஆலயம்
## அமைந்திருக்கும் இடம்

கோலப் பேரா தோட்டம், பாகான் டத்தோ, மலேசியா.

பாகான் டத்தோ அழகிய மலாய் கிராமங்களுக்கும், தென்னை தோப்புகளுக்கும் புகழ் பெற்ற இடமாகும். மேலும் தென்னந் தோட்டங்களாலும், செம்பனைத் தோட்டங்களாலும் சூழப்பெற்ற தமிழ் - தெலுங்கு வம்சாவளியினரைக் கொண்ட ஓர் இடமுமாகும். பாகான் டத்தோ 21-வது மைல், கோல பேராக் தோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோதண்ட இராமர் ஆலயத்திற்கும் வரும் பக்தர்கள் 17-வது மைல் சுங்கை சுமூனில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆலயத்திற்கும் செல்லுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பிரயாணம் - கோலாலம்பூரிலிருந்து பஸ் அல்லது வாடைக்கார் மூலமாக, கரையோரமாக செல்லும் கோலசிலாங்கூர் - சபா பெர்ணம், பாகான் டத்தோ சாலை வழியாக இங்கு வந்து சேரலாம் அல்லது பிளஸ் (PLUS) நெடுஞ்சாலையைப் பயன்படுத்தி தெலுக் இந்தான் வந்து மேற்கே 45 கிலோமீட்டர் சென்றால் பாகான் டத்தோ சாலையிலுள்ள கோலபேராக்கை வந்தடையலாம். வழியைத் தவறவிட்டால் அலுவலக நேரத்தில் தொலைபேசி எண்கள்: 605-6466255 / 6489350 மூலம் அழைத்தால் எந்த வழியாக வரவேண்டும் என்று தெரிவிக்கப்படும்.

ஆலய நிர்வாகம் - நிர்வாக அமைப்பு விளக்கக்கட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புரவலர்; டான்ஸ்ரீ டத்தோ கே. ஆர். சோமசுந்தரம்
தலைவர், தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம்.

புரவலர்: டத்தோ பி. சகாதேவன்
நிர்வாக இயக்குநர், தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம்.

ஆலய நிகழ்ச்சிகள் - நிர்வாக அமைப்பு கோப்பில் காணலாம் (2014 சேர்க்கப்பட்டுள்ளது)

வழிபாடுகள் - பூஜைகள்
தினமும் மூலமூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடு நடைபெறுகின்றது. பக்தர்கள் இந்த வழிபாடுகளில் கலந்துகொண்டு அவர்கள் பக்தியை மேலும் பெருக்கிக்கொள்ளலாம்.

நேரம் - காலை 6.00 - 10.00, மாலை 6.00 - 9.30

சிறப்பு நாட்களில் காலையில் சுப்ரபாதத்துடன் வழிபாடுகள் தொடங்கும்.

குறிப்பு : எல்லா வழிபாடுகளுக்கும், சிறப்பு கொண்டாட்டங்களுக்கும் கட்டணச் சீட்டுக்களை 90 நாட்களுக்கு முன்பே வாங்கிக்கொள்ள வேண்டும். பக்தர்கள் வழிபாடுகளிலும் கொண்டாட்டங்களிலும் நல்லவிதமாக பங்கேற்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூஜைகள் / வழிபாடுகள் / மற்ற வசதிகளுக்கான கட்டணங்கள் நிர்வாக அமைப்புக் கோப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நன்கொடைகள் : காசோலை அல்லது வங்கி தந்தி (Telegraphic Transfer) மூலமாக / வழியாக கீழ்க்கண்ட பெயரில் நன்கொடைகளைச் செலுத்தலாம்.

**SREE RAMA TEMPLE**
**AFFIN BANK**
**A/C NO 10-112-0002104**

குறிப்பு : வங்கி மூலமாக அல்லது ON-LINE வழியாக நன்கொடைகளை அனுப்பினால் ஆலய நிர்வாகத்திற்குத் தெரிவிக்கவும்.

வசதிகள் : ஆலயத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள், திருமணங்கள், பக்தி நிகழ்வுகள் நடத்த போதிய வசதிகள் உள்ளன. ஆலய நிர்வாகஸ்தரை தொலைபேசி எண்: 605-6466255 / 605-6489350 வழி தொடர்புகொண்டு முன் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். Email : nlfcskualaperak@gmail.com

குறிப்பு : தங்கும் வசதிகள் தற்சமயம் இல்லை.

ஆலயத்தில் இருக்கும்போது பக்தர்கள் ஏற்புடைய உடைகள் அணிந்திருக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

தகவல் சாதனங்கள் - நிகழ்வுகள்.

அறிவிப்பு - அண்மையச் செய்திகள்

எழுத்துக்கள்

வார செய்தி

அரங்கம் : படங்கள் / ஒளிப்பதிவுகள்

ஆலயத்துடன் தொடர்புகொள்ள வேண்டிய விபரங்கள் :

Mr. R. Gopalakrishnan (ஆர். கோபாலகிருஷ்ணன்)
President of the Temple

Mr. K. Kamalanathan (K. கமலநாதன்)
Coordinator of the Temple

Tel: 605-6466255 / 605-6489350

| | | |
|---|---|---|
| HQ Contact | : | Tel : +603-22731250<br>Fax: +603-22740826<br>Level 10, Wisma Tun Sambanthan<br>Jalan Sultan Sulaiman<br>P.O. Box 12133<br>50768 Kuala Lumpur<br>Malaysia. |


Feedback/Comments - Link to Administrtor, Temple President and Secretary.